சிறார் தொழிலாளரை பணியமர்த்தினால் புகார் தெரிவிக்கலாம்

மாவட்ட ஆட்சியர்

தருமபுரி ஆட்சியர் அலுவலகத்தில் உலக சிறார் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்ற ஆட்சியர் வே.சரவணன் மற்றும் அலுவலர்கள்.

தருமபுரி, ஜூன் 12: சிறார் தொழிலாளரை பணியமர்த்தினால் புகார் தெரிவிக்கலாம் என தருமபுரி மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில், உலக சிறார் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின உறுதிமொழி ஏற்பு மற்றும் விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் வே.சரவணன் தலைமை வகித்து, சிறார் தொழிலாளர் முறை ஒழிப்பு தின விழிப்புணர்வு உறுதிமொழி வாசித்தார். தொடர்ந்து, அனைத்து அலுவலர்களும் உறுதிமொழி ஏற்றனர். பின்னர், பள்ளி மாணவ, மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வுப் பேரணியை தொடங்கி வைத்து ஆட்சியர் வே.சரவணன் பேசியதாவது:

14 வயதுக்கு உள்பட்ட சிறுவர்களை எவ்வித பணியிலும் ஈடுபடுத்துவதும், 15 முதல் 18 வயதிற்கு உள்பட்ட வளரிளம் பருவத்தினரை அபாயகரமான தொழில்களில் ஈடுபடுத்துவதும் தடை செய்யப்பட்டுள்ளது. சிறாரை வேலைக்கு அமர்த்தினால் ரூ. 20,000 முதல் ரூ. 50,000 வரை அபராதம் மற்றும் ஆறு மாதம் முதல் இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

சிறுவர்கள் எதிர்கால இந்தியாவின் தூண்கள் அவர்களுக்கு கல்வி அளிப்பது நமது கடமை. கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 14 வயதிற்கு உள்பட்ட குழந்தைகள் அனைவரும் கட்டாயம் கல்விக் கற்க வேண்டும். சிறார் தொழிலாளர்கள் அனைத்து பணிகளிலும், வளரிளம் பருவத்தினர் அபாயகரமான பணிகளிலும் பணிபுரிவது கண்டறியப்பட்டால் www.pencil.gov.in என்கிற இணையதளத்திலும், கட்டணமில்லா தொலைபேசி எண் 1098 என்ற எண்களிலும் புகார் அளிக்கலாம் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, ஊரக வளர்ச்சித் திட்ட இயக்குநர் ரூபன் சங்கர் ராஜ், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கவிதா, தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையர் (அமலாக்கம்) ராஜசேகரன், தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் மஞ்சள்நாதன், குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் விஜயா, அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

போக்குவரத்து விதிமீறல்களை கண்காணிக்க தருமபுரி நான்கு சாலையில் தானியங்கி கேமரா !

தருமபுரி, ஜூன் 12: தருமபுரி நகரில் போக்குவரத்து விதிமீறல்களை கண்காணிக்கவும், கட்டுப்படுத்தவும் தானியங்கி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தருமபுரி மாவட்ட காவல் துறை சார்பில், தருமபுரி நகரம், சேலம்-தருமபுரி தேசிய நெடுஞ்சாலை, அதியமான்கோட்டை- நெரலூரு தேசிய நெடுஞ்சாலை ஆகிய சாலைகளில் போக்குவரத்து விதிமீறல்களை கண்காணித்து கட்டுப்படுத்தும் வகையில் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கேமராக்களில் பதிவாகும் காட்சிகளை வைத்து விதிமீறல்கள், குற்றச்சம்பங்கள் ஆகியவை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், தற்போது, பெருநகரங்களில் உள்ளதுபோல, அதிவேகம், தலைக்கவசம், சீட் பெல்ட் அணியாமல் வாகனத்தை இயக்குவது, இருசக்கர வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு அதிகமான ஆள்களை அமரவைத்து செல்வது உள்ளிட்ட பல்வேறு விதிமீறல்களை கண்காணித்து, அபராதம் விதிக்கும் வகையில், வாகனப் பதிவெண் பலகையைப் புகைப்படம் பிடித்து, அபராதம் விதித்து வாகன உரிமையாளரின் கைப்பேசி எண்ணுக்கு குறுந்தகவல் அனுப்பும் வகையில் தானியங்கி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

தருமபுரி நான்குமுனைச் சாலை சந்திப்பில் பேருந்து நிறுத்தம் அருகே உள்ள தனியார் நகைக் கடை முன்புள்ள சாலையிலும், கிருஷ்ணகிரி சாலையில் உள்ள பெட்ரோல் விற்பனை நிலையம் முன்பகுதியிலும் கேமரா பொருத்தப்பட்டுள்ளன. அதேபோல, தருமபுரி நகரம் வாரியார் பள்ளி எதிரில் உள்ள சாலையிலும், சேலம் - தருமபுரி நெடுஞ்சாலையில் பட்டர் பிளை வடிவ மேம்பாலப் பகுதியிலும் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. விரைவில், நான்கு முனைச் சாலை சந்திப்பில் பென்னாகரம் சாலையிலும், திருப்பத்தூர் சாலையிலும் தலா ஒரு தானியங்கி கேமராக்கள் பொருத்தப்பட உள்ளன.

வாகன உரிமையாளர்கள் இணையவழியில் அபராதத் தொகையை செலுத்தி, அதனை சரி செய்து கொள்ளலாம். இத்தகைய தானியங்கி கேமராக்கள் பொருத்துவது வாகனப் போக்குவரத்து விதிமீறல்களை கட்டுப்படுத்தி, விபத்துகள் இல்லாத மாவட்டமாக மாற்றும் முயற்சியில் மாவட்ட காவல் துறை, போக்குவரத்து பிரிவு காவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இக்கேமராக்களின் பார்வையிலிருந்து விதிமீறல்களில் ஈடுபடுவோர் தப்பிச்செல்ல இயலாது என்பதால், இனி பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றி வாகனங்களை இயக்க முன்வருவார்கள் என திர்ப்பார்க்கப்படுகிறது.

தொப்பூர் கணவாய் பகுதியில் அடுத்தடுத்து விபத்து

போக்குவரத்து பாதிப்பு

தருமபுரி தொப்பூர் கணவாய் பகுதியில் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளானதில் சேதமடைந்த லாரி, கார்கள்.

தருமபுரி, ஜூன் 12: தருமபுரி மாவட்டம், தொப்பூர் கணவாய் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு அடுத்தடுத்து வாகனங்கள் மோதி ஏற்பட்ட விபத்துகளால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தொப்பூர் கணவாய் பகுதியில், லாரி, இருசக்கர வாகனங்கள், மூன்று கார்கள் அடுத்தடுத்து மோதி விபத்துக்குள்ளாயின. இந்த விபத்தில் லாரி ஓட்டுநர்கள் உள்பட மூன்று பேர் காயம் அடைந்தனர். அதில் ஒருவருக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர்களை மீட்ட போலீஸார், மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து போக்குவரத்தை சீரமைத்தனர்.

பின்னர் விபத்துக்குள்ளான வாகனங்களை போலீஸார் அப்புறப்படுத்தினர். இதன் காரணமாக தொப்பூர் கணவாய் பகுதியில் ஏராளமான வாகனங்கள் அணிவகுத்து நின்றன. சுமார் ஒருமணிநேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஒசூர் உள்வட்டத்தில் 13 கிராமங்களுக்கு ஜமாபந்தி

ஒசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஜமாபந்தியில் ஆட்சியர் ச.தினேஷ்குமாரிடம் கோரிக்கை மனுவை அளித்த முன்னாள் எம்எல்ஏ கே.ஏ.மனோகரன்.

ஒசூர், ஜூன் 12: ஒசூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்வட்டத்திற்கு உள்பட்ட 13 கிராமங்களுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஜமாபந்தி முதல் நாளில் ஒசூர் உள்வட்டத்திற்கு உள்பட்ட 13 வருவாய் கிராமங்களுக்கு உள்பட்ட பொது மக்களிடமிருந்து, முதியோர் உதவித் தொகை, ஜாதிச் சான்றிதழ், பட்டா மாற்றம், உள்பிரிவு பட்டா மாற்றம், வீட்டு மனைப் பட்டா, பட்டா ரத்து, ஆக்கிரமிப்பு அகற்றுதல், நில அபகரிப்பு, புதிய குடும்ப அட்டை, கிராமக் கணக்கில் மாற்றம், இதர துறை மனுக்கள் என மொத்தம் 259 மனுக்களை பெற்றுக் கொண்ட ஆட்சியர், தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, அவர் மேற்குறிப்பிட்ட 13 கிராமங்களை சேர்ந்த கிராமக் கணக்குப் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, ஒசூர் வட்டம், அண்ணாமலை நகரில் தனது அக்கா இந்து தேவி வீட்டில் வசித்து வரும் தில்லியைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சுனிதாகுமாரி (30) மேல் சிகிச்சைக்காக அக்காவின் குடும்ப அட்டையில் பெயர் சேர்க்க கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், அவருக்கு உடனடியாக குடும்ப அட்டையில் பெயர் சேர்க்கப்பட்டதற்கான ஆணையை வழங்கினார். தொடர்ந்து, அவருக்கு முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்ட அட்டை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

ராமநாயக்கன் ஏரி உள்பட ஒசூரை சுற்றியுள்ள 4 ஏரிகளையும் சிஎஸ்ஆர் நிதியை கொண்டு புனரமைக்க வேண்டும் என முன்னாள் எம்எல்ஏ கே.ஏ.மனோகரன் மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், துணை ஆட்சியர் (பயிற்சி) சாய் சைதன்யா ஜாதவ், தனி மாவட்ட வருவாய் அலுவலர்கள் கயல்செல்வி (தேசிய நெடுஞ்சாலைகள்), ராஜா (உதவி நிலவரித் திட்டம்), உதவி இயக்குநர் (நில அளவை) ஜெயகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் அலுவலக மேலாளர் (பொது) குருநாதன், ஒசூர் வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், தனி வட்டாட்சியர்கள் சண்முகம், சுப்பிரமணி, பரிமேலழகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரியில் இன்று பொது விநியோகத் திட்ட சிறப்பு குறைதீர் கூட்டம்

கிருஷ்ணகிரி, ஜூன் 12: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட சிறப்பு குறைதீர் கூட்டம் சனிக்கிழமை (ஜூன் 13) நடைபெறுகிறது.

இதுகுறித்து, மாவட்ட நிர்வாகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுவிநியோகத் திட்டத்தில் காணப்படும் குறைகளைக் களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும், குடும்ப அட்டைகளில் பெயர் திருத்தம், சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் போன்ற கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, சனிக்கிழமை காலை 10 முதல் பிற்பகல் 1 மணி வரை சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம், அந்தந்த வட்ட வழங்கல் அலுவலர்களால் 8 இடங்களில் நடத்தப்படுகின்றன.

கிருஷ்ணகிரி வட்டம், குருபரப்பள்ளியில் சோமநாதபுரம், ஒசூரில் எஸ்.முதுகானப்பள்ளி, போச்சம்பள்ளியில் பட்டகப்பட்டி, ஊத்தங்கரையில் காமராஜர் நகர், பர்கூரில் குண்டலானூர், சூளகிரியில் பெத்தசிகரலப்பள்ளி, தேன்கனிக்கோட்டையில் அனுசோனை, அஞ்செட்டியில் கேரட்டி கிராமத்திலும் நடைபெறுகிறது.

எனவே, இக்குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் தங்களது குறைகளை வட்ட வழங்கல் அலுவலரிடம் மனுவாக அளித்து பயன்பெறலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

ஊத்தங்கரை அடுத்த ஜோதிநகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்ற ஆசிரியர்கள், மாணவர்கள்.

ஊத்தங்கரை, ஜூன் 12: ஊத்தங்கரை ஒன்றியம், ஜோதிநகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வெள்ளிக்கிழமை குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

முன்னதாக பள்ளித் தலைமை ஆசிரியர் செ.ராஜேந்திரன் குழந்தைத் தொழிலாளர் முறை, அதனால் ஏற்படும் சமூக சீர்கேடுகள், குழந்தைகள் கல்விக் கற்க வேண்டியதன் அவசியம், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு, அதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

பின்னர் ஆசிரியர்கள், அனைத்து மாணவர்களும் உறுதிமொழி ஏற்றனர். நிகழ்ச்சியில் உதவி ஆசிரியர்கள் சோ. சிவகுருநாதன், கோ.ஆனந்தன், பூ.ராம்குமார், ரா. ஜீவா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

விபத்தில் மளிகைக் கடை உரிமையாளர் உயிரிழப்பு

தருமபுரி, ஜூன் 12: தருமபுரியில் சாலை விபத்தில் காயமடைந்த மளிகைக் கடை உரிமையாளர் உயிரிழந்தார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், அதியமான்கோட்டை, சேலம் பிரதான சாலை பகுதியைச் சேர்ந்தவர் வே. கந்தசாமி (63). இவர், அதியமான்கோட்டை காலபைரவர் கோயில் பகுதியில் மளிகைக் கடை வைத்துள்ளார்.

வியாழக்கிழமை முற்பகலில், அவர் அருகில் உள்ள ரேஷன் கடைக்குச் சென்று பொருள்களை வாங்கிக் கொண்டு தனது இருசக்கர வாகனத்தில் வீடுதிரும்பினார்.

அப்போது, சேலம் பிரதான சாலையில் வந்தபோது, அவருக்கு பின்னால் வந்த மற்றொரு இருசக்கர வாகனம் அவர்மீது மோதியது.

இதில் பலத்த காயமடைந்த கந்தசாமியை அக்கம்பக்கத்தினர் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி வெள்ளிக்கிழமை உயிரிழந்தார்.

இது குறித்து அதியமான்கோட்டை காவல்நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பொது அறிவிப்பு

தமிழ்நாடு மாநிலம், கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் டவுன் மற்றும் வட்டம், எஸ்.சி.எஸ் மருத்துவமனை எதிரில், 2வது குறுக்குத் தெரு, ஆசிரியர் காலனி, எஸ்.ஜெ.எண் கட்டிடம், கதவு எண். 3-A4-ல் முகவரியில்; வசிக்கும் **திருமதி. கவிதா ரமேஷ் க/பெ திரு.எஸ். ரமேஷ்** ஆகிய எமது கட்சிக்காரர் வழங்கியுள்ள தகவலின் பேரில் நான் வழங்கும் பொது அறிவிப்பு யாதெனில் :-

மேற்படி எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட ஒசூர் கிராமம் ச.எண். 491/1 பகுதி, விஸ்.ஏக்கர்.3.06 செண்ட்.. தீர்வை.26.59, மற்றும் இதர சர்வே எண்கள் கொண்ட மொத்த 2 ஏக்கர் கொண்ட நிலம் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு, இதில் " SRI Perumal Garden" என பெயரிடப்பட்டு, மற்றும் இதற்கான Regularization Scheme G.O.M.S. No.78, தேதி 04.05.2017 மற்றும் 172 H மற்றும் U.D. தேதி 13.10.2017 File No. 213/2018 ம.ஆ. ஒசூர் புது நகர் வளர்ச்சி குழுமம் (Regularization) எண். 37/2018 இதில் பிளாட் எண். 19-ல், 1400 சதுர அடிகள் கொண்ட நிலத்திற்கு சம்பந்தப்பட்ட தாய் ஆவணமாக பதிவு செய்யப்பட்ட கிரய பத்திர எண். 20315/2019 தேதி 28.11.2019 ஒசூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட துமான தாய் ஆவணத்தை தொலைத்துவிட்டார். மேற்படி அசல் ஆவணம் தொலைந்துவிட்ட காரணத்தினால் எமது கட்சிக்காரர் தமிழ்நாடு காவல் துறை இணைய புகார் பிரிவில் விவர எண். OLC9222600028147 வழியாக கடந்த 11.06.2026-ம் தேதி புகார் அளித்து அதற்கான ஒப்புகையும் பெற்றுள்ளார். எனவே, மேற்படி எமது கட்சிக்காரர் குறிப்பிட்டுள்ள மேற்படி நிலத்திற்கு சம்மந்தப்பட்ட மேற்படி அசல் ஆவணத்தை யாரேனும், எங்கேனும் கண்டெடுத்தால் உடன் எமது கட்சிக்காரருக்கோ அல்லது எனக்கோ இந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும். தவறினால் மேற்படி தொலைந்து விட்ட ஆவணத்தின் உண்மை நகலை எதிர்வரும் சொத்து பரிமாற்றங்கள் உள்ளிட்ட விற்பனை, தானம், அடைமானம் ஆகியவற்றுக்கு அசலாக கருதி பயன்படுத்த உள்ளார் என்பதை அறியவும். அதன்பின் வரும் எந்த கோருரிமையும் ஏற்கப்படமாட்டாது என்பதையும் அறியவும்.

க. வேலாயுதம்., எம்.எஸ்.சி.எம்.எல்.,
வழக்கறிஞர் & சான்றுறுதி அலுவலர்,
ஒசூர் – 635109.
அலைபேசி எண். 94430 93345

தேதி : 13.06.2026
இடம் : ஒசூர்

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002-ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேட்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஒசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : திரு.N.ராமு, த/பெ.நாராயணப்பா, கதவு எண்.3/101, எடப்பள்ளி கிராமம், அச்செட்டிப்பள்ளி அஞ்சல், ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் 635110. **கடன் நிலுவைத் தொகை : 11.06.2026 வரையில் ரூ.58,31,478.87 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேட்பு அறிவிப்பு தேதி : 07.07.2021. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 02.02.2022. சொத்து விபரம் :** சர்வே எண்.351/3A, 352/1 & 351/3B, பிளாட் எண்.75, சர்வே எண்.139/1A1A 147/3A, பாலாஜி ஹை டெக் சிட்டி, சார்ஜாபுரா - பாகலூர் சாலை, கொடியாளம் கிராமம், ஒசூர் தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் - 635103-ல் உள்ள 2400 சதுரடி விஸ்தீரணம் கொண்ட நிலம். சொத்தின் எல்லைகள் : வடக்கில் பிளாட் எண்.74A, கிழக்கில் பிளாட் எண்.82, தெற்கில் பிளாட் எண்.76, மேற்கில் 30 அடி லேஅவுட் சாலை. **காப்பு விலை : ரூ.18,00,000/-. முன்வைப்புத் தொகை : ரூ.1,80,000/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. ஏலம் நடைபெறும் தேதி : 29.06.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன்.** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 22.06.2026 முதல் 26.06.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 29.06.2026 மதியம் 1.00 மணி வரை. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன் நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **29.06.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961-ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.bank.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 11.06.2026
இடம் : ஒசூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

கனரா வங்கி Canara Bank
Syndicate
மண்டல அலுவலகம் : தர்மபுரி
நெ.68/2, கந்தகவாமி வாத்தியார் தெரு, தர்மபுரி - 636701.
Ph : 04342-269410. Cell : 9487914228.

பொது ஏல அறிவிப்பு - அடமான தங்கக் கடன்

எங்கள் **கனரா வங்கியின் அரூர் கிளையில்** கடன் பெற்ற கீழ்க்காணும் நபர்கள், பலமுறை அறிவிப்பு வழங்கப்பட்டும் தங்களது கடன் கணக்குகளுக்கான நிலுவைத் தொகையை இதுவரை செலுத்தத் தவறியுள்ளனர். எனவே, அவர்கள் **29.06.2026** அன்று அல்லது அதற்கு முன்னர் நிலுவையிலுள்ள கடன் தொகை மற்றும் அதனுடன் தொடர்புடைய பிற கட்டணங்களை முழுமையாகச் செலுத்தி, அடமானமாக வைக்கப்பட்டுள்ள நகைகள் / பிணையப் பொருட்களை மீட்டுக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். மேற்கண்ட காலக்கெடுவிற்குள் நிலுவைத் தொகை செலுத்தப்படாத பட்சத்தில், வங்கியின் நடைமுறைகளின்படி, கடன் பெறுநரின் செலவில், மேலதிக அறிவிப்பு ஏதுமின்றி, வங்கியின் முழு விருப்பத்தின் பேரில், அடமானப் பொருட்கள் **பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்** என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

S. No.	கிளையின் பெயர்	கணக்கு எண்.	கடன்தாரரின் பெயர் & முகவரி	மொத்த எடை கிராமில்	31-03-2026 படி கடன் தொகை (ரூ.)
1	அரூர்	180460279878	**K.ஜீவானந்தம்.** த/பெ. கனகசபாபதி, H.தொட்டம்பட்டி கிராம அஞ்சல், அரூர் Tk, தர்மபுரி, தமிழ்நாடு - 636903.	27.00	2,44,397/-

நாள் : 12-06-2026
இடம் : தர்மபுரி

குறிப்பிடப்பட்ட தேதியில், அலுவலக நேரம் முடிந்த பிறகு ஏலம் நேரடி முறையில் (ஆஃப்லைனில்) நடத்தப்படும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
கனரா வங்கி

LIC HFL
LIC HOUSING FINANCE LTD
LIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
1 ஆவது தளம், ஜீவன் பங்கள் பில்டிங், ஹோல்ஸ் சாலை, பெங்களூரு – 560025. தொபே. : 080-43003651

கோரிக்கை அறிவிப்பு

(கடனீட்டுச் சொத்துக்களை நொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (சர்ஃபாசி) 2002 ன் பிரிவு 13(2) ன் கீழ் வெளியிடப்படும் அறிவிப்பு)

நிரல் எண்.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் நபர்களால் அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் விவரங்கள் நிரல் எண்.5 இல் காட்டப்பட்டுள்ளன, மீண்டும் மீண்டும் நினைவூட்டியும்கூட கடன்தாரர் நிரல் எண்.4 இல் காட்டப்பட்டுள்ளபடி அவரால் செலுத்தப்பட வேண்டிய தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் தவறிழைத்து விட்டதால், இதன் விளைவாக இந்த நிலுவைகள் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி (செயல்படாச் சொத்து) NPA-களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நாளில் பதிவு அஞ்சலில் அனுப்பப்பட்ட அறிவிப்புகள் திரும்பி வந்து விட்டன/பட்டுவாடா ஆகவில்லை. எனவே, இந்த வெளியீட்டு நாளில் இருந்து 60 நாள்களுக்குள் நிரல் எண்.2 இல் தங்கள் பெயர்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை அந்தந்த கடன்தாரர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், தவறினால் அவர்களது நிலுவையை வசூலிக்க, LIC ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட., நிறுவனமானது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்துகள் மீது அந்தந்த கடன் கணக்குகளுக்கு எதிராக சர்ஃபாசி சட்டம் பிரிவு 13(4) இன் கீழ் நடவடிக்கைகளைத் தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

சர்ஃபாசி சட்டத்தின் பிரிவு 13(8) இன் படி, கடனீட்டு சொத்துக்களை மீட்கும் அவர்களது உரிமைகுறித்து கடன்தாரர் கவனம் வரவேற்கப்படுகிறது. இந்த உரிமையானது விற்பனை அறிவிப்பு வெளியிடப்படும் தேதி வரை மட்டுமே அவர்களுக்குக் கிடைக்கும்

| வ எண் | கடன்தாரர் பெயர், க